1973 ஏப்ரல் 2]

எல்லோரும் அறிந்துகொள்வதற்கு பாடங்களில் கட்டாயமாகச் சேர்க்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கம் ஏற்படுவதற்கான முயற்சிக்கு ஏற்றபடி திட்டங்களைத் தயாரிக்கும்படி கல்வி இலாகா இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

Grant to the Andhra Mahila Sabha Hospital

* 328 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of Thiru S. Vellapandian): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any grant has been given by the Government to the Andhra Mahila Sabha Hospital in Madras City; and

(*b*) if so, the details thereof?

'ஆந்திர மகளிர் சபா' மருத்துவமனைக்கு மானியம்

திரு. ஜீ. வசந்த பாய் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள ஆந்திர மகளிர் சபா மருத்துவமனைக்கு அரசால் மானியம் ஏதும் வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI: Sir, in view of the fact that Government are contributing anything for the up-keep of the Tourists Hostel attached to the Andhra Mahila Sabha?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, as far as the information is available here, there is no grant for such section of the Andhra Mahila Sabha.

THIRU G. VASANTHA PAI: Sir, in view, of the fact that foreign tourists stay in that hostel, will the Government at least see that the condition of the Hostel is kept in such a manner as to bring some credit to the institution as well as the country?

@ 121-ம் பக்கத்தில் இணைப்பு I -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, it is not my concern. The Tourism Minister may consider about it.

திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவர் அவர்களே, "ஆந்திரா மகளிர் சபா" என்று இருக்கிறது. ஆந்திரா மகில சபா என்று கருதுகிறேன். ஆந்திரா மகில சபா மருத்துவ மனை மூலமாக குடும்பநலத் திட்டப்பணிகள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றனவா? குடும்பநலத் திட்டத்திற்காக என்று தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் மானியம் ஓரளவு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் முட நீக்கி இயல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிட்ட பணிகளுக்காக உதவித் தொகை கேட்பதும் அதை ஒரு வரைமுறைப்படுத்தித் தருவதும் வழக்கம். அந்த முறையில் குடும்பநலத் திட்டத்திற்காக எவ்வளவு என்ற விவரம் இல்லை. ஆனால் அவர்கள் குடும்பநலத் திட்டப்பணிகளையும் செய்து வருகிறார்கள்.

U.N.D.P. Project Reports

* 329 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government have received from the Union Government, any U.N.D.P. Project reports for developing minor fishing harbours in the State; and

(*b*) if so, the details thereof?

ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள மீன்பிடி சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள் ஏதும், மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்கு வந்தனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?